**செ.வெ.எண்: 130** **நாள்: 28.02.2021**

தமிழ்நாடு சட்டமன்ற பொதுத்தேர்தல், 2021 தொடர்பான அறிவிக்கை (26.02.2021) அன்று இந்திய தேர்தல் ஆணையத்தால் வெளியிடப்பட்டுள்ளதைத் தொடர்ந்து, ஆய்வுக்கூட்டம் தஞ்சாவூர் மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகக் கூட்ட அரங்கில் 26.02.2021 அன்று மாலை நடைபெற்றது. அக்கூட்டத்தில், தஞ்சாவூர் மாவட்டத்தில் உள்ள அனைத்து அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சி பிரமுகர்கள் மற்றும் தஞ்சாவூர், திருவையாறு, கும்பகோணம், பாபநாசம், திருவிடைமருதூர், ஒரத்தநாடு, பட்டுக்கோட்டை மற்றும் பேராவூரணி ஆகிய சட்டமன்றத் தொகுதிகளுக்கான தேர்தல் நடத்தும் அலுவலர்கள் கலந்து கொண்டனர். மேலும், தேர்தல் நன்னடத்தை விதிகள் தொடர்பாக புகார்கள் தெரிவித்திட மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் கட்டுப்பாட்டு அறை திறக்கப்பட்டுள்ளது. கட்டணமில்லா தொலைபேசி எண். 1950 மற்றும் அலுவலக எண். 04362 - 230121 ஆகிய எண்களில் தேர்தல் தொடர்பான புகார்களை தெரிவித்திடலாம்.

அன்று (27.02.2021) தேர்தல் தொடர்பான நன்னடத்தை விதிகள் கடைபிடிப்பது தொடர்பான அனைத்து துறை அலுவலர்களுக்கும் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் தலைமையில் கூட்டம் நடத்தப்பட்டு தேர்தல் நன்னடத்தை விதிகள் தொடர்பாக எடுத்துரைக்கப்பட்டது.

தமிழ்நாடு சட்டமன்ற பொதுத்தேர்தல், 2021 நன்னடத்தை விதிகளை 24 மணி நேரமும் கண்காணித்திட, தஞ்சாவூர் மாவட்டத்தில் உள்ள அனைத்து சட்டமன்றத் தொகுதிகளில், ஒவ்வொரு சட்டமன்றத் தொகுதியிலும் மூன்று பறக்கும்படைகள், மூன்று நிலையான கண்காணிப்புக் குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளது. மேலும் அனைத்து சட்டமன்றத் தொகுதிகளுக்கு உட்பட்ட மொத்த வாக்குசாவடிகளான 2291-லிருந்து 1050 வாக்காளர்களுக்கு அதிகமாக உள்ள வாக்கு சாவடிகளிலிருந்து துணை வாக்கு சாவடிகள் பிரிக்கப்பட்டு கூடுதலாக 595 வாக்குசாவடிகளுடன் ஆக மொத்தம் 2886 வாக்கு சாவடிகள் அமைக்கப்பட்டுள்ளது. மேற்கண்ட குழுவினர்கள் மேற்கொள்ள வேண்டிய பணிகள் குறித்து நடைபெற்ற கூட்டத்தில் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களால் எடுத்துரைக்கப்பட்டது.

**மேலும், (27.02.2021) அன்று திரையரங்கு உரிமையாளர்கள், நகை அடகுக் கடை உரிமையாளர்கள், கேபிள் டிவி உரிமையாளர்கள், வங்கியாளர்கள், அச்சக உரிமையாளர்கள் ஆகியோர்களுக்கு தேர்தல் நடத்தை விதிமுறைகள் தொடர்பாக மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களால் விரிவாக எடுத்துரைக்கப்பட்டு அனைவரும் தேர்தல் நடத்தை விதிமுறைகளை பின்பற்றி தமிழ்நாடு சட்டமன்ற பொதுத்தேர்தலை சிறப்பாக நடத்திட ஒத்துழைப்பு அளித்திடுமாறும், தேர்தல் பணியில் ஈடுபடும் அனைத்து அலுவலர்களும் கொரோனா பெருந்தொற்று நோய் தடுப்பூசி தவறாமல் எடுத்துக்கொள்ளுமாறும் மாவட்ட ஆட்சியர் அவர்கள் தெரிவித்துள்ளார்.**

மேலும், தமிழ்நாடு சட்டமன்ற பொதுத்தேர்தல், 2021 நன்னடத்தை விதிமுறைகள் கடைபிடித்திடவும், தேர்தல் பணியில் ஈடுபடவுள்ள அனைத்து அலுவலர்களும் கொரோனா பெருந்தொற்று தடுப்பூசியினை எடுத்துக்கொள்ள வேண்டுமென அனைத்து அலுவலர்களுக்கும் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களால் அறிவுறுத்தப்பட்டது.

மாவட்ட தேர்தல் அலுவலர் மற்றும்
மாவட்ட ஆட்சியர்,
தஞ்சாவூர்.

செய்தி வெளியீடு :- செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், தஞ்சாவூர்.